# தி.மு.க. முப்பெரும் விழா - 2024 (சென்னை) விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## வி.பி.இராஜன்

### பேராசிரியர் விருது



**வி**ருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், மம்சாபுரம் கிராமத்தில் திரு. வெ.பெருமாள், திருமதி வனத்தாய் இணையரின் மூத்த மகனாக 27.5.1950 அன்று பிறந்தவர் திரு.வி.பி.இராஜன் அவர்கள். இவரது தந்தை ஆலைத் தொழிலாளி, தாயார் விவசாயக் கூலி தொழிலாளி ஆவார்.

இராஜபாளையத்தில் பள்ளிக் கல்வி முடித்து, விருதுநகரில் பி.யூ.சி. வரை படித்தார். கல்லூரியில் படிக்கும்போது, கழக மாணவர் அணியில் இணைந்து பணியாற்றினார்.

1969ஆம் ஆண்டில் தான் வாழ்ந்த வாகைக்குளம்பட்டி கிராமத்தில் 'அண்ணா அறிவாலயம்' என்ற பெயரில் படிப்பகம் தொடங்கி, கழகப் பணியில் ஈடுபட்டார்.

1972ஆம் ஆண்டில் வாகைக்குளம்பட்டி ஆதிதிராவிடர் கிளைக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1977ஆம் ஆண்டு இராஜபாளையம் ஒன்றிய துணைச் செயலாளராக பொறுப்புபேற்று, பின்னர், 1983ஆம் ஆண்டு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகப் பணியாற்ற தொடங்கினார்.

1982ஆம் ஆண்டு முதல் தலைமைக் கழகச் சொற்பொழிவாளராக மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளை முழங்கி வரும் இவர், தற்போது மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு 18 முறை சிறை சென்றுள்ளார்.

1997ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாட்டை திறந்து வைத்து உரையாற்றும் வாய்ப்பைப் பெற்றவர் இவர்.

1989 மற்றும் 1996ஆம் ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டு முறை சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றிய வி.பி.இராஜன், 2010ஆம் ஆண்டில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரிய இணைத் தலைவராக பொறுப்பு வகித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முரசொலியில் உடன்பிறப்புக்கு எழுதிய மடலில், 'புலிக்குட்டி வி.பி. இராஜன்' என்று பாராட்டி கலைஞர் அவர்கள் எழுதியதை தனது பெருமையாக வி.பி.இராஜன் கருதுகிறார்.

இவரது மனைவி பெயர் முத்துலட்சுமி. இவருக்கு வி.பி.ஆர்.தமயந்தி என்ற மகளும், வி.பி.ஆர். இளம்பரிதி, வி.பி.ஆர்.கதிரவன் ஆகிய இரண்டு மகன்களும் உள்ளனர்.

தொடர்ந்து கழகப் பணியாற்றி வரும் திரு. வி.பி.இராஜன் அவர்களின் தொண்டினைப் பாராட்டி, தி.மு.க. பவளவிழா ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2024), சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பேராசிரியர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**சென்னை**
**17.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## எஸ்.எஸ்.பழநிமாணிக்கம்

### மு.க.ஸ்டாலின் விருது



தஞ்சை மாவட்டம், தஞ்சை வட்டம், நாட்டாணி கிராமத்தில் திரு. சுப்பையா, திருமதி மரகதம்மாள் ஆகியோரின் மகனாக 15.8.1950 அன்று பிறந்தவர் திரு. எஸ்.எஸ். பழநிமாணிக்கம் அவர்கள்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தஞ்சை தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்ட நேரத்தில், தனது தாய்மாமன்களான சூரக்கோட்டை கோபாலகிருஷ்ணன், கம்பர் என்கிற வரதன் ஆகியோரோடு இணைந்து கலைஞருக்காக தேர்தல் பணியாற்றினார்.

தஞ்சை பிளேக் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நேரத்தில், 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊர்வலம் நடத்தி, இந்தி எதிர்ப்பு வாசகங்களை சுவர்களில் எழுதினார்.

1971ஆம் ஆண்டில் பூண்டி புஷ்பம் கல்லூரியில் படித்த நேரத்தில், மாணவர்களைத் திரட்டி, தஞ்சையில் பல்வேறு தொகுதிகளில் போட்டியிட்ட கழக வேட்பாளர்களுக்கு ஆதரவாக பரப்புரை மேற்கொண்டார்.

பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை பயின்றபோது, மிசா ஆர்.கணேசன் தலைமையில் கல்லூரி மாணவர் தி.மு.க. செயலாளராகப் பணியாற்றினார். அந்த காலகட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

1981ஆம் ஆண்டில், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் போராடி, முத்தமிழறிஞர் கலைஞர், ஆற்காடு வீராசாமி, ஆர்.டி.சீத்தாபதி ஆகியோருடன் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் இருந்தார். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

1985ல் சோவியத் ஒன்றியத்தில் உலக இளைஞர் மாணவர்கள் மாநாட்டில் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டார்.

கழகத்தில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர், விவசாய அணி இணைச் செயலாளர், வெளிமாநிலத் தொடர்புச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்ததோடு, தஞ்சை மாவட்டக் கழகச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். தற்போது உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

1996 தொடங்கி, 1998, 1999, 2004, 2009, 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், கழகத்தின் சார்பில் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார். 2004ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை ஒன்பது ஆண்டுகள் ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சராகவும் பணியாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் தம்மை வழிநடத்திச் சென்றார் என்று பெருமையோடு குறிப்பிடும் இவர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமக்குச் சோதனை வந்தபோதெல்லாம் துணை நின்றார் என்று பெருமையுடன் கூறுகிறார் எஸ்.எஸ். பழநிமாணிக்கம்.

1983ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் மகேஸ்வரி அவர்களை மணந்து கொண்ட திரு.எஸ்.எஸ்.பழநிமாணிக்கத்துக்கு, டாக்டர் ப்ரீத்தி என்ற ஒரே மகள் இருக்கிறார்.

கழகப் பணிகளில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றி வரும் திரு. எஸ்.எஸ். பழநிமாணிக்கம் அவர்களுக்கு, தி.மு.க. பவளவிழா ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2024), சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"மு.க.ஸ்டாலின் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**சென்னை**
**17.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### நன்றி உணர்வோடும், கொள்கை உணர்வோடும் பெரியார் கொள்கையைப் பரப்புவோம்!

# பெரியார் பிறவாமலிருந்தால், நாம் சுயமரியாதை - கல்வி உரிமை பெற்றிருப்போமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை. செப். 18 -* பெரியார் பிறவாமலிருந்தால், நாம் சுயமரியாதை - கல்வி உரிமை பெற்றிருப்போமா? நன்றி உணர்வோடும், கொள்கை உணர்வோடும் பெரியார் கொள்கையைப் பரப்புவோம்! அனைவருக்கும் தந்தை பெரியார் பிறந்த நாள் வாழ்த்துகள் என்று தந்தை பெரியாரின் 146 ஆவது பிறந்த நாளில் (17.9.2024) திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

இன்று (17.9.2024) மானுடத்தையே தனது பரப்பு எல்லையாகக் கொண்டு, 95 வயது வரை - சலிப்பறியாத சரித்திரம் படைத்து, ஜாதி எனும் கொடிய நோயை அழித்து, பிறவி பேதம் எனும் பெண்ணடிமையை அழித்து, சகோதரத்துவத்தையும், சமத்துவம் பொங்கும் "மனிதத்தையும்", தனது இலக்காக்கிக் கொண்டு, உழைத்து, தனக்குப் பின்னாலும் தனது கொள்கை, லட்சியப் பணியும், பயணமும் தொடர்ந்து நடந்திட, நல்லதோர் அடிக்கட்டுமானத்தையும் உருவாக்கி, சமூக தளத்தில் என்றும் போராட, ஓர் இயக்கத்தினையும், அதன் கொள்கைகளை அரசியலும், அகிலமும் ஏற்கப் பல்வகை பாசறைகளும் அமைய வைத்தவருமான அறிவு ஆசானின் 146 ஆவது ஆண்டு பிறந்த நாள் இன்று!

மானமும், அறிவும் தான் மனிதர்களுக்கு அழகு என்று போதித்த 'புதிய புத்தனின்' புத்தொளி பிறந்த நாள்!

வரலாற்றில் தனித்த சிறந்த நாள்!!

பெருவிழா - அதுதான் எம் திருவிழா!

"தமிழ்நாட்டின் தலைவர்களில் பெரும்பான்மையோர் அவரது புகழின் சிதறல்கள்'' என்றார் பொருத்தமாக பேறறிஞர் அண்ணா! அவர் ஒரு நாணய உற்பத்திச் சாலை (Mint)!

"அவர் பிறவாதிருந்தால் நாமெல்லாம் சுயமரியாதைக்காரர்களாகி இருக்க முடியுமா?"

கல்விக் கண் பெற்றவர்களாகவும், பதவி, பணி வாய்ப்புக்குத் தகுதி உள்ளவர்களாகவும் நம்மை ஆக்கிட்ட அமைதிப் புரட்சிக்கு வித்திட்ட ஏர் உழவர் அல்லவா அவர்!

எதிர்நீச்சலில் வெற்றி பெறுவது எப்படி என்பதை அன்றும் - இன்றும் - என்றும் அனைவருக்கும் கற்றுக் கொடுத்தத் துறை போகிய பேராசானின் பிறந்த நாள் இன்று!

அனைவரும் அனைத்தும் பெறும் சரியான அறம் வளர்க்கும் அறிவியல் அறிஞர்!

அகிலத்தின் அறிவுப் புரட்சித் திருநாள் இன்று!

உலகின் பற்பல நாடுகளில் வாழும் மனிதர்கள் அவரது மண்டைச் சுரப்பை "தொழுது" (பின்பற்றி) மகிழ்கின்ற உவகையின் உச்சத் திருநாள் இன்று!

உயர் எண்ணங்கள் மலர்ந்துகொண்டே

உள்ள தத்துவப் பேராசானின் வித்தக

விளைச்சலை வீதிதொடங்கி வியனுலகம் வரை

அங்கிங்கெனாதபடி எங்கும் காண்கின்றோம்!

அவரது தொண்டால் பயன்பெற்ற - பெறும் மக்களும், அக்கொள்கையை தங்களது மானுட உரிமைப் போர்களுக்கான எழுச்சியின் எடுத்துக்காட்டாகவே எண்ணுகின்றனர்.

பல நாட்டு மக்களும் அதைத் துலங்கச் செய்து பயன்பெற்றுப் பகுத்தறிவைப் பரப்பும் பார்வையும், பாதையும் சிறந்து அமைந்து தகத்தகாய ஒளியை உலகுக்கு அளித்துக் கொண்டே உள்ளது!

15.9.2024 அன்று ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோவில் 'ஈரோட்டுப் பூகம்பம்' என்றாலும், அழிவற்ற அறிவுள்ள விளைச்சல் அறுவடை கண்டு மகிழ்ந்தோம்.

நேற்று (17.9.2024) சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகள், வடஅமெரிக்கா, ஆஸ்திரேலியா, அய்ரோப்பா என்று உலகம் முழுவதும் பகுத்தறிவு, சமூகநீதி, அறிவியல் விழாவாக தந்தையின் பிறந்த நாள் விழாவின் கொள்கை வெற்றி வெளிச்சத்தை நாம் கண்டு மகிழ்ந்தோம்! பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தோம்!!

ஆம், இப்போது

"பெரியார் உலக மயம் - உலகம் பெரியார் மயம்!"

வேகமான சுழற்சி கண்டு சொக்கி நிற்கிறோம்!

நன்றி உணர்வோடும், கொள்கை உணர்வோடும் தந்தை பெரியார் கொள்கையைப் பரப்புவோம்!

அனைவருக்கும் தந்தை பெரியார் பிறந்த நாள் வாழ்த்துகள்!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாநகராட்சி 2வதுமண்டல குழு தலைவர்வீனஸ் ஆர்.நரேந்திரன், ஆர்.சீனிவாசன் ஆகியோரின்தந்தை கழக புரவலர் வீனஸ் என்.ராதாகிருஷ்ணன் அவர்களின் 33வதுநினைவு நாளில் அவரது திருஉருவப்படத்துக்கு மாநகர தி,மு,க, செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கதிரேசன், சி.சந்திரசேகர் அன்புநிதி, பகுதி செயலாளர்கள் வீ.ஜி.கே. சுந்தரவிஜி, முரளி கிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர்கள் வி.எஸ்.முருகன் ஜெய்சங்கர், பகுதி பிரதிநிதிடி.ராஜா,வட்டசெயலாளர் முரளி கிருஷ்ணன் மற்றும் 34வதுவட்டகழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### சிவகங்கை வடக்கு ஒன்றியக் கழகம் சார்பில்

# பவளவிழாவினை முன்னிட்டு திருமலையில் கழகக் கொடி ஏற்று விழா!

*சிவகங்கை, செப். 18 -* கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு கழகத்தின் பவள விழாவினை முன்னிட்டும் வீடுகள் தோறும் தெருக்கள் தோறும் கழகக் கொடியினை ஏற்றுமாறு உத்தரவிட்டிருந்தார்.

அவரது உத்தரவினை ஏற்று மாவட்ட கழக செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் ஆலோசனையின் பேரில் சிவகங்கை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் தலைமையில் திருமலை கிராமத்தில் இரு வண்ண கழக கொடி ஏற்றப்பட்டது.

அவைத்தலைவர் பாலுசாமி முன்னிலையில் மூத்த கழக முன்னோடி சோலைமலை கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி ,எஸ்.

.எம். மதிவாணன், ஒன்றிய குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர், மாவட்ட சுற்றுச்சூழல். அணி துணை அமைப்பாளர் மு. குமணன், தொ. மு.ச. செயலாளர் முருகேசன் ஒன்றிய கவுன்சிலர் பத்மாவதி பிரபாகரன் மகளிரணி லதா நாகராஜன் நிர்வாகிகள்முத்துராமலிங்கம்,ராமமூர்த்தி, சோமசுந்தரம் மாரி உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் 27 வது வார்டு இந்திரா நகரில் நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் கழக கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் ராஜா சருபுதீன்,வட்ட பிரதிநிதி சேது உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.





திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்பத்தூர் பேருந்து நிலையம் முதல் பேரறிஞர் அண்ணா சிலை வரை பேரணியாக சென்று அவரின் திருவுருவச் சிலைக்கு திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார். மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.